ராணி
காமிக்ஸ்
முகமூடி வீரர்
மாயாவி
தோன்றும்
பேய்த்தீவு

பரிசு பெற்ற படங்கள்!

பிலீப்,
துத்திப்பட்டி.

சங்கர் கணேஷ்,
கோவை.



வை. சுரேஷ்குமார்,
சேலம்.

பு. ஹேமலதா,
புட்டிரெட்டிபட்டி.

ராணி காமிக்ஸ்-234
(மாதம் இருமுறை இதழ்)

மார்ச் 16-31
1994

Tex Sampath Tirupur

பெங்காலியாவில் உள்ள முக்கியப் புள்ளி,
களில் சிலர் திடீர்த் திடீரென்று
விபத்துக்குள்ளாகி இறந்து போனார்கள்.
அந்த விபத்துக்கள் பற்றி பத்திரிகைகளில்
செய்தி வெளிவந்துகொண்டிருந்தன.
ஒரு நாள்—
அணுகுண்டு
சோதனையாளர்
வர்கோ கார்
விபத்தில்
மரணம்!
இன்னொரு நாள்—
இதய அறுவை நிபுணர்
டாக்டர் அரிஸ்டோ
விமான விபத்தில்
பலியானார்!
இரண்டு நாள் கழித்து—
கட்டிடக்கலை நிபுணர்
டிக்கின்சன் சென்ற கப்பல்
கடலில் மூழ்கியது!
அடுத்த நாள்—
வயலின் வித்துவான்
பிரிட்டோ பனிப் புயலில்
சிக்கி காலமானார்.
காட்டிலிருக்கும் மண்டைஓட்டுக்
குகையில் இருந்த வானொலியிலும்
செய்தி ஒலிபரப்பானது.
அணுகுண்டு
சோதனையாளர்
வர்கோ கார் விபத்தில்
மரணமடைந்தார்! இந்த
மாதத்துக்குள் இது
மூன்றாவது விபத்து!
உலகப் புகழ்பெற்ற
வயலின் வித்துவான் பிரிட்டோ
சுவிட்சர்லாந்தில் பனிப் புயலில்
சிக்கி காலமானார்!
மாயாவி செய்தியை
கேட்டுக்கொண்டிருந்தார்.

கட்டிடக்கலை நிபுணர் ஒருவர் கடலில் மூழ்கியிருக்கிறார்!
கிளிக்...!
உடனே மாயாவி வானொலியை அணைத்தார்.
ரெக்சு! நாம் இப்போது தங்கக் கடற்கரைக்குச் செல்வோமா?
அய்யா...!
தங்கக் கடற்கரை என்றால் அவ்வளவு விருப்பமா?
ஆமாம், மாமா! இப்பொழுது எதற்காக அங்கே போகிறோம்?
டயானாவின் நினைவு வந்து விட்டதா?
ரெக்சு! ஜிம்போவையும், ராணியையும் அழைத்துக்கொண்டு வா!
ரெக்சு கூண்டில் இருந்த சிங்கத்தை அழைத்தான்.
வா ராணி! தங்கக் கடற்கரைக்குச் செல்லலாம்!
தங்கக் கடற்கரையில்— ஒரு பாட்டில் கடலில் மிதந்து வந்தது.

ராணி, ஜிம்போ நாம் தங்கக் கடற்கரைக்குச் செல்கிறோம்! ஒரே. குசிதான்!
ரெக்சு மரத்தில் ஏறினான்.
ஜிம்போ! இப்படி வா! நான் உன் முதுகில் ஏறிக் கொள்ளுகிறேன்!
ஜிம்போ மரத்துக்கு கீழே வந்ததும் ரெக்சு, யானை மீது குதித்தான்.
புறப்படலாமா ரெக்சு!
நான் என் படையுடன் தயாராக இருக்கிறேன் மாமா.
மண்டைஓட்டுக் குகையில் இருந்து இரகசிய பாதையான அருவி வழியாக டெவிலும், ராணியும் வெளியே வந்தன.
அதைத் தொடர்ந்து ரெக்சு ஜிம்போவில் வந்தான்.

அவனைத் தொடர்ந்து மாயாவி
வந்தார்.
தங்கக் கடற்கரையில் அந்த மர்மப்
பாட்டில் யாருக்
காகவோ காத்துக்
கிடந்தது.
காட்டுப்பாதை வழியாக மாயாவி
அவர்களை அழைத்துச் சென்றார்.
மாமா! இந்தப்
பக்கமாகத்தானே
செல்ல வேண்டும்!
காட்டுக்குள் இருந்த கிராமத்து மக்கள்
மாயாவியைப் பார்த்ததும் அன்புடன்
கையசைத்து
வழியனுப்பி
வைத்தார்கள்.
மர்மப் பாட்டிலில் என்ன செய்தி
காத்துக் கிடக்கிறதோ, தெரிய
வில்லை?

என்ன ராணி, அதற்குள் களைத்துவிட்டாயா?
வேண்டுமானால் ஜிம்போவின் மீது ஏறிக் கொள்!
உடனே ராணி ஜிம்போவின் மீது பாய்ந்து ஏறிக் கொண்டது.
ரெக்குக்கு பின்னால் ராணி அமர்க்களமாக அமர்ந்து பயணம் செய்தது.
ரெக்க! நீ பலே கில்லாடிதான்!
ராணி பாவம் மாமா! களைத்து விட்டது!
மாயாவி மலைமுகடு வழியாக பயணம் செய்தார்.
மாமா! இந்த மலைமுகடு உங்களை மாதிரியே அமைந் திருக்கிறதே, எப்படி மாமா?
அது இயற்கையின் படைப்பு!
அய்யா! தங்கக் கடற்கரைக்கு வந்து விட்டோம்!

மாமா! நாங்கள் களைப்புதீர கடலில் குளிக்கப் போகிறோம்!
தாராளமாக குளியுங்கள்!
ரெக்சு, டெவில், ராணி மூவரும் கடலை நோக்கி ஓடினார்கள்.
அங்கேதான் அந்த மர்மப் பாட்டில் மிதந்துகொண்டிருந்தது.
மாமா! தண்ணீர் அருமையாக இருக்கிறது. நீங்களும் வாருங்கள்!
பிறகு வருகிறேன்,
மாயாவி அறைக்குள் சென்றார்.
தனி அறையில் அமர்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தார்.
மாமா! நீங்கள் யாரை நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும்!
அதெல்லாம் ஒன்றுமில்லை! நீ போய் விளையாடு!
கடலில் மிதந்துகொண் டிருக்கும் அந்த மர்மப் பாட்டிலை டெவில் பார்த்தது.
டெவில்! அது என்ன?
ரெக்சு ஓடிவந்தான்.

ஆனால் மாயாவி தனி அறையில் டயானாவின் நினைவுகளோடு இருந்தார்.
டெவில்! ஏதோ பாட்டில் போல தெரிகிறதே?
உடனே ரெக்சு அந்த பாட்டிலை எடுத்தான்.
ஏய்...! பாட்டிலுக்குள் எதோ கடிதம் இருக்கிறது!
ரெக்சு பாட்டிலை எடுத்துக் கொண்டு மாயாவிடம் சென்றான்.
மாமா! ஒரு பாட்டில் கிடைத் திருக் கிறது!
பாட்டிலுக்குள் ஏதோ கடிதம் இருக்கிறது!
ரெக்சு பாட்டிலுக்குள் இருந்த கடிதத்தை வெளியே எடுத்தான்.
மார்ச்சு—16 நாங்கள் பெங்காலியாவுக்கு அருகில் உள்ள ஒரு தீவில் கைதிகளாக சிறை வைக்கப்பட்டிருக்கிறோம்! எங்களைக் காப்பாற்றுங்கள்! வர்கோ, பிரிட்டோ.
ஏதோ அவசரச் செய்தி போல தெரிகிறது!
யாரோ இந்த பாட்டில் மூலமாக செய்தி அனுப்பியிருக்கிறார்கள்!
ரெக்சு! சும்மா விளையாட்டுக்கு யாரோ இப்படிச் செய்திருப்பார்கள் நீபோய் விளையாடு!

சிறையில் இருப்பவர்கள் எழுதியது போல இருக் கிறது!
மற்றவர்களை ஏமாற்ற அப்படித்தான் செய்வார்கள்!
வர்கோ, பிரிட்டோ என்று கையெழுத்துப் போட்டிருக்கி றார்கள்!
யார் என்று சொன்னாய்?
மாயாவிக்கு 'டக்'கென்று பொறி தட்டியது.
உடனே மாயாவி அந்த கடிதத்தை வாங்கிப் படித்தார்.
மார்ச்சு–16.
நாங்கள்
பெங்காலியாவிற்கு
அருகில் உள்ள ஒரு
தீவில் சிறை வைக்கப்
பட்டிருக்கிறோம்.
எங்களைக்
காப்பாற்றுங்கள்!
வர்கோ!
பிரிட்டோ!
பாட்டிலில்தான் கடிதம் இருந்ததா?
பாட்டில் எங்கே கிடந்தது?
கடலில் கிடந்தது மாமா!
கைதிகளா நிச்சயம் இருக்காது. ஏமாற்றுவதற்காக இப்படி எழுதி அனுபபி யிருக்கி றார்கள்?
ஏன் மாமா?
கையெழுத்துக்குரியவர்கள் இரண்டு பேரும் பெரிய புள்ளிகள். ஆனால் இருவரும் இப்போது உயிரோடு இல்லை!

பாட்டிலில் இருந்த கடிதம் மாயாவியை குழப்பியது.
இவர்கள் இருவரும் யார் மாமா?
இருவரும் பிரபல மானவர்கள். வர்கோ என்பவர் விஞ்ஞானி! பிரிட்டோ வயலின வித்துவான்!
இருவரும் சமீபத்தில் இறந்துவிட்டார்கள் என்று வானொலியில் செய்தி கேட்டேன்!
சரியாக ஒரு வாரம் கழித்து இக்கடிதம் கிடைக்கிறது!
ஒருவேளை அவர்கள் இறப்பதற்கு முன் இந்த கடிதத்தை எழுதியிருக்க லாமே!
சரியாகச் சொன்னாய் ரெக்சு!
மாயாவி வானொலி செய்தியை நினைவுப் படுத்திப் பார்த்தார்.
வர்கோ கார் விபத்தில் பலியானார். வயலின் வித்துவான் பிரிட்டோ பனிச் சரிவில் சிக்கி உயிர் இழந்தார்!
கொஞ்சம் யோசிக்க வேண்டும்!

Tex Sampath Tirupur

அன்று இரவு காட்டிலாகாவுக்கு போன் வந்தது.
ஏய்... இரகசிய தலைமையில் இருந்து போன் வந்திருக்கிறது
என்ன செய்வது?
கலோனல் இங்கு இல்லை! தொலைபேசி தொடர்பை கலோனல் வீட்டுக்குக் கொடு!
நடுஇரவில் கலோனல் வீட்டு தொலைபேசி அலறியது.
முட்டாள்! யாரடா இரவு நேரத்தில் போன் செய்வது?
டிரிங்...
டிரிங்...
கலோனல்! நொந்தரவு செய்தற்கு மன்னிக்கவும். அவசரமாக எனக்கு ஒரு தகவல் வேண்டும்!
!
கலோனல்! சமீபத்தில் நடந்த விபத்தில் வர்கோவும், பிரிட்டோவும் இறந்தது உண்மைதானா?
உண்மை சார்!
சரி! அவர்கள் இருவருடைய கையெழுத்தும் எனக்கு வேண்டும். உடனே எனக்கு பறவை மூலமாக அனுப்பி வையுங்கள்.
சரி சார்!

மிகவும் அவசரம். உடனே அனுப்பி வைக்கவும்!
நாளைக் காலையில் அனுப்பிவிடுகிறேன் சார்!
ஏன் அந்த விபத்தைப் பற்றி கேட்கிறார்!
மறுநாள் காலை—
சார் சில வாரங்களுக்கு முன்புதான் வர்கோவும், பிரிட்டோவும் விபத்தில் இறந்துவிட்டார்கள்!
இருவரும் ஒரே விபத்திலா செத்தார்கள்?
இல்லை சார்! வர்கோ பிரேசிலில் ஒரு கார் விபத்தில் செத்தார். பிரிட்டோ சுவிட்சர்லாந்தில் பனிமலைச் சரிவில் மாட்டிக்கொண்டு செத்தார்!
அவர்கள் கையெழுத்து உடனே வேண்டும்!
இப்பொழுதே அதற்கு ஏற்பாடு செய்கிறேன் சார்!
விரைவாக நடக்கட்டும்!
இதெல்லாம் எதற்கு சார்?
அதெல்லாம் கேட்கக்கூடாது! இரகசியம்! பரம இரகசியம்!

நல்லது! சொல்லுங்கள்!
சார் கலோனல் பேசுகிறேன்! இறந்தவர்கள் பற்றுக் குறிப்பு எடுத்திருக்கிறேன்!
வர்கோ பிரேசில் நாட்டில் ஒரு கார் விபத்தில் பலியாகிவிட்டார்!
வயலின் வித்துவான் பிரிட்டோ சுவிட்சர்லாந்தில் பனிமலைச் சரிவில் செத்தார். அவரது உடல்கூட கிடைக்கவில்லை!
வர்கோவின் கார் தீபிடித்ததில் அவர் தீயில் கருகி அடையாளம் தெரியாமல் போய்விட்டார் சரிதானே?
ஆமாம்
கலோனல்! இறந்தவர்களுடைய கையெழுத்தை உடனடியாக பறவை மூலம் அனுப்பி வையுங்கள்!
ஓ.கே. சார்!
ரொம்ப நன்றி!
பரவாயில்லை சார்!

சார்! இந்த கமாண்டர் எங்கிருந்து பேசுகிறார்?
தெரியவில்லையே!
ஒருவேளை நிலாவுக்குள இருந்துகொண்டு பேசுகிறாரோ என்னவோ!
சார்! இந்த வழக்குக்கு மட்டும் ஏன் அதிக கவனம் செலுத்துகிறீர்கள்!
வாயை மூடு! நான் நான்கு மணி நேரத்தில் திரும்பிவிடுவேன்!
கலோனல் ஜீப்பில் புறப்பட்டார்
சார்! எங்கே போகவேண்டும்?
பழைய சாலை முடியும் இடத்துக்குச் செல்!
ஜீப்பை இங்கே நிறுத்து!
அங்கே நிறைய பறவைகள் அடைக்கப்பட்டிருந்தன.
இந்தச் செய்தியை உடனடியாக பறவை மூலம் அவருக்கு அனுப்பிவை!
சரி சார்!
புறாவில் செய்தி அனுப்புவார்களோ?

சார்! இது புறா இல்லையே!
ஆமாம்! இது கழுகு இனத்தைச் சேர்ந்தது!
செய்தி பறவையின் காலில் கட்டப்பட்டது.
அப்பறவை பறக்கவிடப்பட்டது.
இதில் செய்தி அனுப்பினால் பயங்கர வேகத்தில் செய்தி போகவேண்டிய இடத்துக்கு சென்றடைந்துவிடும்!
சார்! செய்தி கமாண்டருக்குத்தானே போகிறது!
ஆமாம்!
செய்தியை அனுப்பியதும் கலோனல் புறப்பட்டுச் சென்றார்.
செய்தியை சுமந்து சென்ற பறவை காட்டுக்குள் இருக்கும் ஓர் இடத்துக்கு வந்தது.
அங்கிருந்த காட்டுவாசி அந்தச் செய்தியை மனிதக் குரங்கிடம் கொடுத்து அனுப்பினான்
FALK & BARRY

ரெக்சு! அதோ நமக்கு தேவையான செய்தி வந்து விட்டது!
இறந்துபோன வர்கோ, பிரிட்டோவின் கையெழுத்துக்களை அனுப்பி வைத்திருக்கிறார்கள்!
இனி இரண்டு கையெழுத்தையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியதுதான்!
உடனே மாயாவி கடிதத்தில் இருந்த கையெழுத்தையும், கலோனல் அனுப்பிய கையெழுத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தார்.
வர்கோ பிரிட்டோ ஒன்றுபோல் இருக்கிறதா மாமா?
ஆமாம். ஒன்று போலதான் இருக்கிறது!
மார்ச்சு—28 நாங்கள் பெங்காலியாவிற்கு அருகில் உள்ள ஒரு தீவில் சிறை வைக்கப் பட்டிருக்கிறோம்! எங்களைக் காப்பாற் றுங்கள்!! வர்கோ, பிரிட்டோ.
கையெழுத்து ஒன்றுபோல் இருப்பதைப் பார்த்தால் நிச்சயம் அவர்கள் உயிரோடு இருக்க வேண்டும்!
ஆமாம் மாமா!

மாயாவிக்கு இன்னமும் சந்தேகம் விலகினதாக தெரியவில்லை.
மார்ச்சு—10
நாங்கள் பெங்காலியாவிற்கு அருகில் உள்ள ஒரு தீவில் சிறை வைக்கப்பட்டிருக்கிறோம்! எங்களைக் காப்பாற்றுங்கள்!!
வர்கோ, பிரிட்டோ.
இருவரும் இறந்துபோன இடத்திற்கும்
இதற்கும் பத்து ஆயிரம் கிலோ மீட்டர் இருக்குமே!
ஆனால், அவர்கள் இரண்டு வாரத்துக்கு முன் கடிதம் எழுதியிருக்கிறார்கள்!
அப்படியானால்...?
இருவரும் உயிரோடுதான் இருக்க வேண்டும், கைதிகளாக அடைக்கப்பட்டிருக்கிறார்கள்! ஏன்?
உடனே மாயாவி புறப்பட்டார்.
மாமா! நானும் உங்களுடன் வருகிறேன் மாமா?
வேண்டாம் ரெக்சு! இது ஆபத்தான வேலை!
இப்பொழுது எங்கே போகப் போகிறீர்கள்!
முதலில் அவர்கள் சிறையிருக்கும் அந்தத் தீவை கண்டுபிடிக்க வேண்டும்!

நான் மோராவுக்கு போகிறேன். அங்குள்ள மீனவர்களிடம் விசாரித்தால் தீவைப்பற்றி ஏதாவது தகவல் கிட்டும்!
அதுவும் சரிதான்!
மாமா! அவர்களை எப்படியும் கண்டுபிடித்து விடுவீர்கள் தானே!
நிச்சயமாக கண்டு-பிடித்துவிடுவேன்!
மோரா என்பது காட்டிலிருக்கும் மீனவர்களின் கிராமம். மாயாவி அங்கே சென்றார்.
அய்யா மாயாவி!
வாழ்க!
வாருங்கள் மாயாவ பாரே!
அனைவரும் நலமாக இருக்கிறீர்களா?
பெங்காலியாவிற்கு அருகில் ஏதாவது தீவு இருக்கிறதா?
ஆமாம் இருக்கிறது! ஆனால் நாங்கள் யாரும் அங்கே செல்வதில்லை!
அங்கே நிறைய பேய்கள் இருக்கிறது!

அந்த பேய்த்தீவுக்கு செல்ல வேண்டுமானால் இரண்டு நாள் கடலில் பயணம் செய்ய வேண்டும்!
ஒரு தடவை எங்கள் மீனவர்கள் அந்தப் பகுதிக்கு சென்றபொழுது சூறாவளிக் காற்றில் மாட்டி உயிரை விட்டார்கள்!
அந்தத் தீவு பக்கம் சென்றாலே பேய்களின் அட்டகாசம் தாங்க முடியாது. அவைகள் ஊளையிட்டு யாரையும் அண்டவிடாது!
ஊ...
ஊ...
யீ...
யீ...
நான் அந்த பேய்த் தீவுக்குச் செல்ல வேண்டும். என்னை அங்கே அழைத்துச் செல்லுங்கள்!
அய்யோ! அங்கே போனால் பேய் சும்மா விடாது! நான் வரவில்லை!
மாயாவி! உங்களுடன் நான் வருகிறேன்! பேய் என்ன செய்துவிடும் பார்த்து விடலாம்!

Tex Sampath Tirupur

நால்வரும் துடுப்பு போட்டு படகை பேய்த் தீவை நோக்கி செலுத்தினார்கள்.
ஒரு பெண் கணவனை அனுப்பிவிட்டு அழுதாள்!
ஏய்... ஏன் அழுகிறாய்? அவர்களுடன்தான் மாயாவி செல்கிறாரே!
படகு சென்றுகொண்டிருந்தது. இரவு வந்தது..

மூன்று பேரில் ஒருவனை தூங்க வைத்துவிட்டு மற்றவர்கள் துடுப்பு போட்டார்கள். பிறகு அவனை எழுந்திருக்கச் செய்துவிட்டு மற்றவன் துடுப்பு போட்டான்.
நாம் போகும் பாதை சரியானதுதானே?
ஆமாம் மாயாவி!
மறுநாள் பொழுது விடிந்தது. பயணம் தொடர்ந்தது. அவர்கள் தூண்டில் போட்டு மீன் பிடித்தார்கள்.
பிறகு அந்த மீனையே உணவாக சாப்பிட்டார்கள்.
அன்றும் பொழுதுசாய்ந்து இருட்டத் தொடங்கியது. நட்சத்திரங்கள் வானில் கண்சிமிட்டத் தொடங்கியது.

ஒரு இடத்தில் சிறு மலை ஒன்று தெரிந்தது.
மாயாவி! அதோ அதுதான் பேய்த் தீவு!
அங்கேதான் நிறைய பேய்கள் இருக்கின்றன!

ரொம்ப நன்றி! நான் இங்கிருந்து கடலில் நீந்தி தீவுக்குச் செல்கிறேன்!
நீந்தியா? வேண்டாம் மாயாவி. இது ஆபத்தான இடம்!


அங்கே பாருங்கள்! சுறா மீன்கள் நிறைய கிடக்கின்றன!

திடீரென்று மலைகளுக்கு பின்னால் இருந்து பேய்கள் எழுந்து ஊளையிட்டு ஆர்ப்பாட்டம் செய்தன.
ஈ. இ.ஈ.
அதே பேய்கள்!
மீனவர்கள் நடுங்கிப் போனார்கள்.
மாயாவி! நீங்கள் அங்கே போக வேண்டாம். பேய்கள் உங்களை ஏதாவது செய்துவிடும்!
பேய்களின் கூப்பாடு பயத்தை உண்டாக்கியது. போதா குறைக்கு சுறா மீன்கள் வேறு அலைந்துகொண்டிருந்தன.
நன்றி! நீங்கள் வீட்டுக்கு புறப்படுங்கள்! நான் வருகிறேன்!
மாயாவி! சுறாவையும், பேய்களையும பார்த்தபிறகும் போகவேண்டுமா?

நீங்கள் புறப்படுங்கள்! சுறாக்களை நான பார்த்துக் கொள்ளுகிறேன்!
மாயாவி சட்டென்று கடலுக்குள் பாய்ந்தார்.
பேய்களின் கூச்சல் காதைப் பிளந்தன. ஆனால் மாயாவி பயப்படாமல் கடலுக்குள் குதித்து தீவை நோக்கி நீந்தினார்.
படகில் இருந்த மீனவர்கள் மீன் துண்டுகளை கடலில் போட்டனர்.


அங்கே சுற்றிக்கொண்டிருந்த சுறா மீன்கள், மீன் துண்டுகளை சாப்பிட பாய்ந்து வந்தன.


அதனால் மாயாவி சுறாக்களின் தொந்தரவு இல்லாமல் தீவை நோக்கி நீந்த முடிந்தது.

சுறா மீன்களை கவர்வதற்காக மீனவர்கள் மீன் துண்டுகளை கடலில் போட்டுக்கொண்டே வந்தனர்.
சுறா மீன்கள் நம்மைத் தொடர்ந்து வருகின்றன!
மாயாவி தீவுக்குச் சென்று இருப்பாரா?
நான் பார்க்க வில்லையே!

அதேநேரம்– மாயாவி தீவை அடைந்தார். பேய்கள் கூச்சல் போட்டாலும் மாயாவி அசராமல் தீவை நோக்கி நடந்தார்.
ஊ.. ஊ..
மாயாவி சிறிது நேரம் அந்த பேய்களையே நோட்டமிட்டார்.
இது பேய் அல்ல! சினிமா படம் போட்டு ஏமாற்றுகிறார்கள்!
உடனே மாயாவி மரத்தின் மீது ஏறி நோட்டமிட்டார்.
தீவில் பேய் இருப்பதாக மீனவர்களை பயங்காட்ட இப்படி ஏற்பாடு செய்திருக் கிறார்கள்!

அங்கே- சினிமா படப்பெட்டி வைத்து சினிமா போல ஒளிபரப்பிக் கொண்டிருந்தார்கள்.
சினிமா படப்பெட்டி, ஒலிபெருக்கி வைத்து பேய் இருப்பதாக நம்ப வைக்கிறார்களா? ஆள் இல்லாமல் படம் மட்டும் ஓடிக் கொண்டிருக்கிறது!
மாயாவி மரத்தில் இருந்து நோட்டமிட்டுக் கொண்டிருந்தார்.
வீவீவீவீவீவீவீவீ...
திடீரென்று சத்தமும் படமும் அடங்கிப்போனது. மாயாவி மரத்தில் இருந்து. கீழே இறங்கினார்.
யாரோ இந்த தீவுக்குள் புகுந்துகொண்டு மற்றவர்களை நெருங்கவிடாமல் செய்கிறார்கள்!

மாயாவி அப்படியே நடந்து வந்தார்.
காலில் ஏதோ தட்டுபடுகிறதே!
மாயாவியின் கால் வயரில் பட்டது.
உடனே அலார மணி பயங்கரமாக அலறியது.
ரிங்...ரிங்...ரிங்...!
ரிங்...ரிங்...!
ரிங்...ரிங்...!
என்ன இது:
அலார மணி ஒலித்ததும் மாயாவி சுறுசுறுப்பானார்.
ஓர் இடத்தில் இருந்த மர அறையின் கதவு திறக்கப்பட்டது. உடனே உள் ளேயிருந்து பயங்கரமான நாய்கள் வெளியே பாய்ந்து வந்தன.

Tex Sampath Tirupur

ஓர் இடத்தில் ஆட்கள் வருவது தெரிந்ததும் மாயாவி மறைந்து நின்றார்.
அலாரம் அடிக்கிறது! என்னவாக இருக்கும்?
நாய்கள் திறந்து விடப்பட்டிருக்கின்றன!
ஏதாவது மிருகம் தீவுக்குள் நுழைந்திருக்குமா?
இந்தத் தீவில் நம்மைத் தவிர வேறு எந்த மிருகங்களும் கிடையாது!
மாயாவி மரத்திற்கு பின் பதுங்கி நின்று அவர்களை நோட்டமிட்டார்.
தீவுக்குள் ஒரு ஏரி வேறு, இருக்கிறதே!
குகைகளுக்குள் கம்பி போடப்பட்டு அறை தெரிகிறதே! உள்ளே மிருகங்கள் அடைத்து வைக்கப்பட்டிருக்குமா?

மாயாவி பாறைகளுக்கு பின் பதுங்கி நின்று நடப்பதைப் பார்த்தார்.
என்ன ஒரே கூச்சலாக இருக்கிறது!
இங்கே என்ன நடக்கிறது? தெரியவில்லை.
ஆ... உள்ளே மனிதன் அல்லவா இருக்கிறான்!
யாரோ தப்பிவிட்டான் போலிருக்கிறது! நாய் வறு திறந்துவிடப் பட்டிருக்கிறது!
அவனாவது தப்பிக்கட்டும்!
அதனால் நீங்களும் தப்பிவிடலாம் என்று நினைக்கிறீர்களா? அது நடக்காது!
திடீரென்று மாயாவி ஒரு காவலாளியை மடக்கினார்.
ஆ...! ஆ...!

ஏய்...! இங்கே வர்கோ, பிரிட்டோ எங்கே சிறை வைக்கப்பட்டிருக்கி றார்கள்?
ஆ...! குகைச் சிறையில்!
குகைச் சிறையின் சாவியைக் கொடு!
இல்லை! சாவி என்னிடம் இல்லை!
பரவாயில்லை! நீ முதலில் மூச்சடைந்து கிடக்க வேண்டும்!
படார்...
மாயாவி அவன் கழுத்தில் ஒரு வெட்டு வெட்டினார்.
வர்கோ...! பிரிட்டோ...!
நாங்கள்தான்!
நாங்கள்தான்!
நான் வர்கோ! அவர் பிரிட்டோ!
நீங்கள் பாட்டிலில் அனுப்பிய கடிதம கிடைத்தது!
அப்படியா? ரொம்ப மகிழ்ச்சி! இனி கவலை இல்லை!
இங்கே என்ன செய்கிறீர்கள்?
இந்த குகையில் சிறை வைக்கப் பட்டிருக்கிறோம்! நீங்கள் யார்?

என்னை விடுங்கள்! நீங்கள் செத்துவிட்டதாக கதை கட்டிவிடப்பட்டிருக்கிறது!
செத்துவிட்டதாகவா?
அவர்களின் உரையாடலை ஒருவன் தொலைக்காட்சிப் பெட்டியில் பார்த்துக்கொண்டிருந்தான்.
இறந்துபோனதாக சொல்லப்பட்ட இரண்டு பேரை மாயாவி குகைச் சிறையில் சந்தித்தார்.
பிரிட்டோ! நீங்கள் பனிமலைச் சரிவில் சிக்கி செத்துவிட்டதாக செய்தி!
வர்கோ! நீங்கள் கார் விபத்தில் மரணம் அடைந்து விட்டதாக செய்தி!
இது என்ன அக்கிரமம்!
நீங்கள் எதற்காக சிறை வைக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரியாது?
தெரியாது!
அப்போது ஒரு குரல் கேட்டது.
காரணததை நான் சொல்கிறேன்!

அனைத்தையும் நானே விளக்கமாக சொல்கிறேன்!
மாயாவி உடனே துப்பாக்கியை எடுத்தார்.
ஏய்...! மரியாதையாக துப்பாக்கியை கீழே போடு! இல்லை நீ நிற்கிற இடத்திலேயே பிணமாகி விடுவாய்...!
உடனே மாயாவிக்கு முன் நான்கைந்து துப்பாக்கிகள் தலையை நீட்டின.

மரியாதையாக துப்பாக்கியை கீழே போட்டுவிடு! இல்லை செத்து விடுவாய்!
நல்ல பிள்ளை! அப்படியே நடந்து வா! அருகில் ஒரு கதவு இருக்கிறது!
உடனே மாயாவி துப்பாக்கியை கீழே போட்டார்.

மாயாவிக்கு கட்டளைகள் மட்டும் வந்துகொண்டிருந்தது.
எங்களை தேடிவந்து ஆபத்தில் மாட்டிக் கொண்டாயே?
உன்னையும் எங்களுடன் சிறையில் தள்ளி விடுவார் கள்!

மாயாவி அருகில் இருந்த கதவு வழியாக உள்ளே வந்தார். உள்ளே வந்ததும் கதவு பட்டென்று பூட்டிக்கொண்டது.
பட்டார்...!
அடேயப்பா!

Tex Sampath Tir

சிறையில்-
உங்களை தெரியாமலா அந்த முகமூடி இங்கே வந்திருப்பான்?
இல்லை! அவர் யார் என்று எனக்குத் தெரியவில்லை!
எனக்கு அவரைப் பார்த்த மாதிரி நினைவு இல்லை!
நீ இப்போது என்னைப் பார்க்க வேண்டும், அவ்வளவுதானே!
ஆமாம்! உன்னைப் பார்த்தால்தானே பேச முடியும்!
உடனே ஒருவன் மாயாவி முன் நாற்காலியில் அமர்ந்திருந்தான்.
உன்னை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது! உன் தைரியத்தை பாராட்டு கிறேன்!
இறந்துபோனதாகச் சொல்லி இவர்களை ஏன் சிறையில் அடைத்திருக்கிறாய்?
உன் பெயர் என்ன?
எந்தப் பெயர்? பொதுவாக என்னை பாதுகாவலன்-என்று அழைப்பார்கள்!
பாதுகாவலனாமே! இவர்களை ஏன் சிறையில் அடைத்து வைத்திருக்கிறாய்?
இங்கு. உனக்கு எந்தச் சிறை வேண்டும் சொல்! அதில் உன்னையும் அடைத்து விடுகிறேன்!

இப்படி கேட்டால் நீ பதில் சொல்லமாட்டாய்? உன்னை...!
பொறு! அவசரப்படாதே!
மாயாவி அவனை நோக்கி பாய்ந்து சென்றார்.
போன வேகத்திலேயே மாயாவி எதிரோ மோதி திரும்பி வந்து விழுந்தார்.
முட்டாள்! உனக்கும் எனக்கும் இடையில் கண்ணாடிச் சுவர் இருக்கிறது. அதுவும் உடைக்கமுடியாத கண்ணாடி!
இப்போதாவது அந்த இருக்கையில் உட்காருகிறாயா?
உட்காருகிறேன்!
நீ போலீசுக்காரன் இல்லை என்பது எனக்குத் தெரியும்! கள்ளக் கடத்தல் தொழிலுக்காக இங்கே வந்திருக்கிறாயா?
என்னை கடத்தல்காரன் என்று நினைத்துவிட்டாயா?

நீ சொல்வது போல நான் போலீசுக்காரன் இல்லை!
அதுதான் எனக்குத் தெரியுமே! நீ கடத்தல் காரனாக இருக்கப் போய்த்தான் முகமூடி அணிந்திருக் கிறாய்?
சரி! உன்னுடைய வியாபாரம் என்ன?
ஏன் உனக்குத் தெரியாதா?
உலகில் உள்ள பிரபலமான வர்களை விபத்தில் செத்து விட்டதாகச் சொல்லி அவர்களை இங்கே சிறை வைத்திருக்கிறாய்! அது ஏன்?
அதுதான் என் வியாபாரம்! அவர்களுக்கு நான் பாதுகாவலன்! அவர்களை கடத்தி வந்து இங்கே வைத்திருக்கிறேன்! பிறகு நல்ல விலைக்கு அவர்களை ஏலம் விடுவேன்!
இவர்களை ஏலம்விடப் போகிறாயா?
ஆமாம்! இவர்களுடைய அறிவக்குத்தான் விலை!
உதாரணத்திற்கு பார்! வர்கோ ஒரு விஞ்ஞானி. அணுகுண்டு தயாரிக்கக் கூடியவர்

உலக மார்க்கெட்டில் இவருடைய மதிப்பு எவ்வளவாக இருக்கும் என்று நினைக்கிறாய்?
நீயே சொல்!
இவருடைய மதிப்பு 5 கோடி ரூபாய்!
!
ஆகா! இதற்குத்தான் உனக்கு பாதுகாவலன் பட்டமா?
அதோ அருகில் உள்ள டைரியில் ஒரு பட்டியலே இருக்கிறது. எடுத்துப் பார்.
மாயாவி அருகில் இருந்த டைரியை எடுத்துப் பார்த்தார்.
வர்கோ– அணு ஆய்வாளர். விலை 5 கோடி! பிரிட்டோ– வயலின் வித்துவான் விலை 1 கோடி.
அடுத்து நகர மேயர். விலை 1 கோடி! அடுத்தது– டாக்டர்...!
அனைத்து பெரிய மனிதர்களுக்கு விலை போடப்பட்டுவிட்டது!
ஆமாம்! ஏலத்தில் போட்டி கடுமையாக இருக்கும்!

அவன் கொடுத்த பட்டியலில் பெரிய பெரிய புள்ளிகளின் படமும், குறிப்பும் இருந்தன.
வர்கோ அணு ஆய்வாளர் ரூ. 5 கோடி.
பிரிட்டோ வயலின் வித்துவான் ரூ. 1 கோடி.
அந்தோணி மேயர் ரூ. 1 தோடி.
அரிஸ்டோ இதய அறுவை நிபுணர் ரூ. 4 கோடி.
இவ்வளவு பெரிய நிபுணர்களை சாதாரணமான நீ ஏலம் விடப்போகிறாய்?
இல்லை முகமூடி! நீ என்னை புர்ஞ்சுக்கவே இல்லை! நானாக யாரையும் கடத்து வதில்லை. கடத்தச் சொல்லுவார்கள், கடத்துகிறேன்.
நீ என்ன சொல்கிறாய்?
பிரபலமானவர்களை கடத்தச் சொல்வார்களா? யார் சொல்வார்கள்!
உதாரணத்திற்கு, மருத்துவர் அரிஸ்ட்டோவை எடுத்துக் கொள். அவர் பெரிய இதய அறுவை நிபுணர்!
இன்னொருவர் பெரும் பணக்காரர். பெயரைச் சொல்லமாட்டேன். அவருக்கு இதயநோய்.
மருத்துவர் அரிஸ்டோவை. உடனே வந்து என்னைப் பார்க்கச் சொல்!
அவர் தன் உதவியாளரை அனுப்பினார்.

இப்போது என்னைப் பார்க்க நூறு நோயாளிகள் வந்திருக்கிறார்கள். என்னால் வரமுடியாது!
ஓகோ. அப்படியா?
உடனே அந்த பணக்காரர் என்னிடம் வந்தார்.
பிரபல இதய மருத்துவரை கொண்டு வரவேண்டு மென்றால் விலை அதிகமாகுமே!
பணத்தைப் பற்றி எனககு கவலை இலலை! எப்படியும் அவன் வேண்டும்!
இன்னொரு கோடிசுவரருக்கு இசை என்றால் போதும். அதனால் வயலின் வித்துவான் பிரிட்டோவை அழைத்து தனக்கு மட்டும் வாசிக்கச் சொன்னார்!
என் முதலாளி நிறைய பணம் தருவார்!
இருக்கட்டுமே! டிக்கெட் எடுத்து வந்து அரங்கத்தில் அவர் என் இசையை ரசிக்கட்டும்!
முட்டாள்! அப்படியா சொன்னான். அவனை எப்படி வரவைப்பது என்று எனக்குத் தெரியும்!
அவனும் என் உதவியை நாடிவந்தான்! இப்பொழுது சொல்! நான் பாது காவலன்தானே!

பிரபலங்களை உன் வியாபாரத்துககு பயன் படுத்திக்கொள்கிறாயா?
இல்லை! அது என் வேலை அல்ல! அவர்கள் கேட்பதற்கு நான் விலை வைக்கிறேன்!
வயலின் வித்துவான் பிரிட்டோவை கடத்தி அவர்களிடம் விட்டுவிடுவேன்.
ம்... வயலின் வரசி!
இசை தேவைப்படும் பொழுது அவர்கள் அவனை வயலின் வாசிக்கச் சொல்லி ரசித்தார்கள்
அதே போலத்தான் விஞ்ஞானியும்.
எனக்கு ஒரு அணுகுண்டு செய்து கொடு!
முடியாது!
விஞ்ஞானி மறுத்தால் அவனை சிறையில் தள்ளிவிடுகிறார்கள்.
நீ அணுகுண்டு செய்து தந்தால்தான் உனக்குச் சாப்பாடு!
அதற்காக பிரபலங்களை ஏன் செத்ததாக நம்பவைக்கிறாய்:
மக்கள் அவர்களை காணாமல் தேடிவிடக் கூடாது அல்லவா?

காணாமல் போயிருக்கிறார்கள் என்றால் போலீசார் எளிதில் கண்டுபிடித்துவிடக்கூடும்! நீ பலே கில்லாடியான ஆள்தான்!
இல்லாவிட்டால் என்னால் இந்த வியாபாரத்தை தொடர்ந்து நடத்தி வெற்றி காண முடியுமா? உனக்கும் ஒரு விலை வைக்கலாம்?
என்னையும் விலை பேசப் போகிறாயா?
நீ ஒரு தைரியசாலி! இல்லாவிட்டால் என்னைத் தேடி இங்கே வந்திருப்பாயா!
நான் உலகில் பிரசித்திப் பெற்றவர்களைத்தான் என் பட்டியலில் சேர்ப்பது வழக்கம்!
நான் ஒன்று உன்னை விற்கவேண்டும். இல்லாவிட்டால் உன்னை அழிக்க வேண்டும்! நீயே உன் முடிவை தேர்ந்து எடுத்துக்கொள்!
?!

என்னை விலை பேசப் போகிறாயா?
உன்னை விலை பேசிப் பயன் இல்லை!
நான் விலை பேசுவது- பெரிய சினிமா நடிகர்கள், அறிஞர்கள் போன்ற வர்களுக்குத்தான்!
என் வியாபாரமே கோடிக்கணக்காகத்தான்! நீ என்ன கோடிக்குச் சமமானவனா?
நான் எத்தனையோ பேரை சந்தித்திருக் கிறேன். ஆனால், நீ வித்தியாச மானவன்!
சீக்கிரம் என் விலையைச் சொல்! உன்னை மக்களுக்கு அடையாளம் காட்ட வேண்டும்!
மக்களுக்கா!
யார்? மீனவர்கள் தானே உன் மக்கள்! அவர்கள் இந்தப்பக்கம் தலைவைத்துப் படுக்க மாட்டார்கள்!

அவர்கள் என் தொழிலுக்கு இடையூறாக இருக்கக்கூடாது என்பதற்காக பேய்களை நடமாடவிட்டேன்!
ஏய்... முகமூடி! ஊர் பெயர் தெரியாதவனுக்கெல்லாம் நான் விலை நிர்ணயிப்ப தில்லை!
ஓகோ... அப்படியா?
நான் ஒரு கோடி ரூபாய் மதிப்பு பெற மாட்டேனா?
உலகில் உள்ளவர்களுக்கு நீ யார் என்று தெரிய வேண்டாமா?
தெரியாமல் இருப்பது நல்லதுதான்.
அப்பொழுதுதான் உன்னைக் கொன்றால் யாருக்கும் சந்தேகம் வராது!
முதலில் நீ மரியாதையாக சிறையில் இருப்பவர்களை விடுதலை செய்துவிட்டு போலீசில் சர்ணடைந்து விடு!
என் இடத்துக்கே வந்து என்னையே சரணடையச் சொல்கிறாயா? உனக்கு எவ்வளவு தைரியம்?

கைதிகளை விடுவித்துவிட்டு நீயும் உன் ஆட்களும் சரணடையா விட்டால்...!
என்னடா செய்வாய்? மிரட்டிப் பார்க்கிறாயா?
நான் என் வியாபார இரகசியங்களை உன்னிடம் சொன்னதே தப்பு! இவ்வளவு நேரம் உன்னை விட்டுவைத்திருப்பதும் மகாதவறு!
நீ எங்கும் தப்பமுடியாது! இந்த அறையை பூட்டி விட்டேன்! உன்னை பனிக் கட்டியில் கட்டிப் போட்டு விசாரித்தால் நீ யார் என்று தெரிந்துவிடும்
உடனே மாயாவி தன் இருக்கையை தூக்கி வீசினார்!
முட்டாள்! நான் யார் என்று காட்டுகிறேன்!
இந்த கண்ணாடி தடுப்புச்சுவர் உடையா தல்லவா?
டமார்...!
கண்ணாடியை உடைக்க முடிய வில்லை!
ஆனால், கதவு எனக்கு தூசி மாதிரி! பார்க்கிறாயா?

மாயாவி அந்த அறைக் கதவின் மீது பயங்கரமாக மோதினார்.
படார்...!
மாயாவி மோதியதும் கதவு தூள் தூளாகிப் போனது.
படார்...!
பிறகு அதன் வழியே மாயாவி வெளியேறினார்.
அவனைப் பிடியுங்கள்! அவனைப் பிடியுங்கள்!
தலைவரின் குரல் மற்ற அறைகளில் உள்ள ஒலிபெருக்கியில் எதிரொலித்தது.
அவனைப் பிடியுங்கள்!
உடனே காவலாளிகள் சுறுசுறுப்படைந்தார்கள்.

VB
Tex Sampath Tirupur

டேய்! நான் இங்கே இருக்கிறேன்!
ஆ...! கழுத்து!
மாயாவி மேலிருந்து தலைவனை பிடித்துத் தூக்கினார்.
குகை சிறைச்சாலையில் பொருத்தப்பட்டிருக்கும் துப்பாக்கியை எங்கே இருந்து இயக்குகிறாய், சொல்!
எனக்குத் தெரி...யா...து...!
மாயவியின் இரும்புப் பிடிக்குள் அவன் சிக்கி படாதபாடுபட்டான்.
சொல்! எங்கே இருக்கிறது!
உள் அறையில் இருக்கிறது!
மாயாவி அவனை உள் அறைக்கு அழைத்து வந்தார். அங்கே தொ.கா. பெட்டி இருந்தது.
பெட்டி வழியாக உன் ஆட்களை துப்பாக்கியை கீழே போடச் சொல்!
டேய்! அனைவரும் துப்பாக்கியை கீழே போடுங்கடா...!
?

பிறகு தலைவனை குகைச் சிறைக்கு அழைத்து வந்தார், மாயாவி.
ம்...: சிறைக் கதவை திறந்துவிடு!
உங்கள் தைரியத்தை பாராட்டுகிறேன். உங்களால்தான் எங்களுக்கு விடுதலை கிடைத் திருக்கிறது!
பிறகு வாழ்த்தலாம்! முதலில் ஆளுக்கொரு துப்பாக்கியை எடுத்துக்கொள்ளுங்கள்!
இவர்களை அந்த விமானத்தில் ஏற்றுங்கள்!
முகமூடி அணிந்திருக்கிறாயே? யார் நீ? உனக்கு நல்ல விலை தருகிறேன்!
காட்டிலாகா தலைமை அலுவலகம்.
ஆமாம்! இதுதான் காட்டிலாகா? நீங்கள் எல்லாம் யார்?
முதலில் உங்கள் கலோனலை காட்டுங்கள். அவரிடம் சென்றால் உண்மை விளங்கும!
மாயாவி தூரத்தில் இருந்து அ .களை நோட்டமிட்டார்.

மறுநாள் பத்திரிகையில்–
இறந்தவர்கள் உயிருடன் வந்தார்கள்!
தீவிரவாதியின் அட்டூழியத்தை வெட்டவெளிச்ச மாக்கப்பட்டது!
இறந்தவர்கள் உயிரோடு இருப்பது புதுமையான கதைதான்!
இறந்து போனவர்கள் உயிருடன் திரும்பி வந்தார்கள்.
ஒரு விசித்திரமான வழக்கு! இறந்து போனவர்கள் உயிருடன் திரும்பி வந்திருக்கிறார்கள்!!
மாயாவி மீண்டும் மண்டைஓட்டு குகைக்குச் சென்றார்.
மாமா! பாட்டிலில் செய்தி அனுப்பியவர்களை கண்டுபிடித்து விட்டீர்களா?
அது ஒரு பெரிய கதை ரெக்சு!
கதையா! சொல்லுங்கள் மாமா...!
அய்யா! கதை!
முதலில் சாப்பிட வேண்டும். அப்புறம் கதை சொல்கிறேன்!
(முடிந்தது)

உலகில் உயர்ந்தோன்!

—எஸ். சங்கரநாராயணன்

தமிழா கொஞ்சம் நில்லு! – உந்தன்
தலையை நிமிர்த்திச் சொல்லு!
அமிழ்தாம் மொழியை வளர்க்க – நீயும்
ஆற்றிய தென்ன சொல்லு!

உலகில் முதன்மொழி தமிழே! – என்று
உரைப்பதால் என்ன லாபம்?
நிலவில் காலடி பதித்த – மனிதன்
தேசம் யாதெனச் சொல்லு!

இலக்கிய இலக்கண மெல்லாம் – தமிழில்
இருக்கும் பெருமை தன்னால்
உலகுக் கென்ன லாபம்? – பிறரும்
உணரச் செய்ய வேண்டும்!

புதிய சிந்தனை வேண்டும்! – நீயும்
புகழுடன் விளங்க வேண்டும்!
அதிசய உலகம் காண – உந்தன்
ஆற்றல் பெருக வேண்டும்!

திறமை உனக்கு உண்டு! – என்றே
திண்ணமாய் நம்ப வேண்டும்!
உறுதி யோடு உழைத்தால் – இந்த
உலகில் நீயே உயர்ந்தோன்!

RANI COMICS
TAMIL FORTNIGHTLY

Regd. No. TN/MS (N)/461
Registered as Newspaper in Sri Lanka

தினத் தந்தி

வழங்கும்

வெள்ளிதோறும்

சிறுவர் தங்கமலர்

* அட்டையில் உங்கள் குழந்தையின் படம்
* புராண படக்கதை
* துப்பறியும் படக்கதை
* குழந்தைகளுக்கு அறிவியல் தகவல்கள்
* மாயாஜால சிறுவர் தொடர்கதை
* சிறுகதைகள்
* பொழுதுபோக்கு அம்சங்கள், புதிர்கள், விடுகதைகள்

தினத்தந்தியுடன்

வெள்ளிதோறும் இலவச இணைப்பாக

32 பக்க வண்ண புத்தகம்

உங்கள் கடைக்காரரிடம் கேட்டு வாங்குங்கள்